தினமலர்
உண்மையின் உரைகல்
DINAMALAR
National Tamil Daily

# வன மரபியல் நிறுவனத்தில் உலக சுற்றுச்சூழல் தினம்

**கோவை, ஜூன் 6–**

கோவை வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தில் செயல்படும் சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையத்தில், உலக சுற்றுச்சூழல் தின விழா, டிஜிட்டல் முறையில், 'பேஸ்புக் லைவ்' மூலம் கொண்டாடப்பட்டது.

முதுநிலை முதன்மை விஞ்ஞானி கண்ணன் வாரியர் வரவேற்றுப் பேசினார். வன மரபியல் நிறுவன இயக்குனர் குன்னி கண்ணன், இந்திய வன ஆராய்ச்சி மற்றும் கல்விக்கழகம், நாட்டின் 13 முக்கிய நதிகளை புத்துயிர் ஊட்டுவதற்கான விரிவான திட்ட அறிக்கையை தயாரிப்பது பற்றி விளக்கினார்.

விழாவை முன்னிட்டு மாணவர்கள், பொதுமக்களுக்காக, சுற்றுச்சூழல் என்ற தலைப்பில் ஓவியப்போட்டி நடத்தப்பட்டது. இதில் 156 பேர் பங்கேற்றனர். வெற்றியாளர்களுக்கு பரிசுகளும், பங்கேற்ற அனைவருக்கும், இ–சான்றும் வழங்கப்பட்டன.

31. News in Dinamalar, Coimbatore, 06.06.2021, Digital Observance of World Environment Day by IFGTB ENVIS.